1980 ஜூலை 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை.

மேட்டுப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

*கு. கா. வி. எண் 53—திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி மேட்டுப்பாளையத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிக்குப் பொறியியல் கட்டிடம் கட்ட 1962-63ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து 1964-ம் ஆண்டில் பொறியியல் கட்டிடம் கட்ட ஆரம்பித்து 6 அடி உயரம் கட்டிடம் கட்டி முடிவு அடையாத நிலையில் நிறுத்தப்பட்ட கட்டிடம் மிகவும் ஆபத்தான பழுதடைந்த நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): அக்கட்டடம் கட்டத் தொடங்கி பின்னர் 1964ஆம் ஆண்டில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனைக் கட்டி முடிக்க பொதுப்பணித்துறையிடம் மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளதாகவும், மதிப்பீடுகள் வந்தவுடன் அவ்வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், திருச்சிராப்பள்ளி தலைமைக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார். இது பற்றி முழுமையான விவரங்களை அரசு பெற்று தேவையான மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. பெரியசாமி: 1962-63ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, 1964 ஆம் ஆண்டில் அது கட்ட ஆரம்பித்து, இந்த 16 வருஷம் ஆனபிறகும் அந்தக் கட்டிடம் 6 அடி உயரத்திற்கு மேல் கட்டப்படவில்லை, அந்தக் கட்டிடம் இடிந்து போகும் நிலையில் இருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க இன்னும் 32 வருஷம் ஆகுமா அல்லது உடனடியாகக் கட்டி முடிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் வந்தவுடன் அந்த வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. பெரியசாமி : தலைவர் அவர்களே, 1962–63–ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1964–ல் 20,000 ரூ. செலவு செய்து 6 அடி உயரம் வரை கட்டியிருக்கிறார்களே அது மதிப்பீடு இல்லாமலா கட்டினார்கள்? எதனால் அந்தப் பணி நிறுத்தப்பட்டது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பழைய மதிப்பீட்டில் இப்போது கட்டிடம் கட்டித் தர யாரும் தயாராக இருக்க மாட்டார்கள்.

திரு. ரா. பெரியசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அந்த திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த வருஷத்திலேயே அதைக் கட்டுவதற்கான ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த மதிப்பீடுகள் வந்தவுடன் அந்த மதிப்பீடுகளுக்கு ஏற்ப அந்தப் பணிகள் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும். விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தால் பழைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அந்தக் கட்டிடத்தை இந்த ஆண்டு கட்ட முடியாது.

திரு. எஸ். சிவராமன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்து, வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, 16 ஆண்டுகாலமாக அது கட்டப்படவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன? சில ஒப்பந்தக்காரர்கள் சரிவர வேலைகளைச் செய்யாமல் காலத்தை கடத்திக் கொண்டு வந்து, பிறகு அது லாபகரமாக இருக்காது என்று தெரிகிறபோது அதை நிறுத்தி விட்டு, மறுபடியும் சிலகாலம் கழித்து புதிய மதிப்பீடுகள் கொடுத்து அதை முடிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள், இது வரவேற்க தக்கதல்ல. இப்படி சரிவர செயல்படுத்தாத ஒப்பந்தக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விட்டதா அந்த ஒப்பந்தக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் கட்டும் பணியை நாம் பொதுப்பணித்துறையிடம் தந்து விடுகிறோம். அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்து, கட்டிடத்தைக் கட்டிக்கொடுக்கிறார்கள். அதற்காக ஆகும் செலவைத்தான் கல்வித் துறையில் தருகிறார்கள். நாமே இன்னொரு துறையிடம் புள்ளி விவரங்களைப் பெற்றுத்தான் தரவேண்டி இருக்கிறது. ஆனால் கல்வித் துறையினரைப் பொறுத்தவரையில், அதை உடனடியாகக் கட்டித் தருவதற்கு முயற்சிகள் எடுத்து, அந்தத் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி அதை விரைவாக முடிக்க தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

1980 ஜூலை 31]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் முக்கியநோக்கமே ஏழத்தாழ 16 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தப்பள்ளிக் கட்டிடம் இன்னும் முடிவுறாதநிலையில் இருப்பதற்காக உள்ள காரணம் என்ன என்பதை அறியவும், திருத்திய மதிப்பீடுகள் வாங்குவது என்று சொன்னால் அதை 1 அல்லது 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் வாங்கிவிட முடியும் என்கிற நிலை இருப்பதால், அதைச் செய்யாமல், இவ்வளவு ஆண்டுகாலமாக அது தாமதப்பட்டு வருவதற்காக உள்ள நிலைமைகள் என்ன என்பதை அறியவும், அதே நேரத்தில் எஸ்டிமேட் தொகை குறைவாகப்போடப்பட்டதா, பல ஆண்டு காலமாக அது எடுக்கப்படாமல் இருப்பதற்காக காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 ஆண்டுகாலத்தில் நாங்கள் ஆட்சியில் இருந்தது $2\frac{1}{2}$ ஆண்டுகள். அதற்கு முன்னாலே கிட்டதட்ட 14 ஆண்டுகாலம் எங்களைவிட மிகப் பெரியவர்கள் பொறுப்பில் இருந்து இருக்கிறார்கள். அவர்களால் சாதிக்க முடியாததை விரைவாகச் சாதிக்கவேண்டும் என்று இப்போது கேள்விகள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நாம் நிச்சயம் அதை விரைவில் சாதித்துத் தருவோம் என்றுக் கூறிக்கொள்கிறேன்.

மாவட்ட நீதிபதி பதவிகள்

*கு. கா. வி. எண் 54—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரிடைத் தேர்வு எப்போது நடந்தது ?

(ஆ) தற்போது மாநிலத்தில் மொத்தம் எத்தனை மாவட்ட நீதிபதிகள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டியுள்ளது ?

(இ) இரண்டாம் வகுப்பு நடுவர் வேலையில் எத்தனைப்பேர் வேறு துறையிலிருந்து தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஈ) இரண்டாம் வகுப்பு நடுவர்கள் சங்கம் மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்துவதற்கு நீதிமன்ற தடைவாங்கியுள்ளார்களா?

(உ) எப்போது மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்தப்படும்?